## ஜனவரி – 12 – வெள்ளி

**தூய பெனடிக்ட்**

**அவர்கள் நாள்முழுவதும் உம் பெயரில் களிகூர்வார்கள்:**

**திபா. 89:16**

---------------------------------------------------------------

### முதல் வாசகம் : 1 சாமுவேல் 8 : 4 – 7, 10 - 22

அந்நாளில் இஸ்ரயேலின் பெரியோர் அனைவரும் ஒன்று கூடி சாமுவேலிடம் இராமாவுக்கு வந்தனர். அவர்கள் அவரிடம், ”இதோ உமக்கு வயது முதிர்ந்துவிட்டது. உம் புதல்வர்கள் உம் வழிமுறையில் நடப்பதில்லை. ஆகவே, அனைத்து வேற்றினங் களிடையே இருப்பது போன்று ஓர் அரசனை நியமித்தருளும்” என்று கேட்டுக் கொண்டனர். ”எங்களுக்கு நீதி வழங்க ஓர் அரசனைத் தாரும் என்று அவர்கள் கேட்டது சாமுவேலுக்குத் தீயதெனப்பட்டது. சாமுவேல் ஆண்டவரிடம் வேண்டிக் கொண்டனர். ஆண்டவர் சாமுவேலிடம் கூறியது ”மக்கள் குரலையும், அவர்கள் உன்னிடம் கூறுவது அனைத்தையும் கேள். ஏனெனில், அவர்கள் உன்னை புறக்கணிக்கவில்லை. அவர்களை நான் ஆளாதபடி என்னைத் தான் புறக்கணித்துவிட்டனர். ஓர் அரசன் வேண்டுமென்று தம்மிடம் கேட்ட மக்களுக்கு சாமுவேல் ஆண்டவர் கூறிய அனைத்தையும் கூறினார். உங்கள் மீது ஆட்சி செய்யும் அரசனின் உரிமைகளாவன: அவன் உங்கள் புதல்வர்களை தன் தேரோட்டிகளாகவும் தன் குதிரை வீரர்களாகவும் வைத்துக் கொள்வான். அவர்களைத் தன் தேர்களுக்கு முன் ஓடச் செய்வான். அவன் அவர்களை ஆயிரத்தினர் தலைவராகவும், ஐம்பதிமர் தலைவராகவும், தன் நிலத்தை உழுபவராகவும், தன் விளைச்சலை அறுவடை செய்வராகவும், தன் போர்கருவிகளையும் தேர்க் கருவிகளையும் செய்பவராகவும் நியமித்துக் கொள்வான். மேலும் அவன் உங்கள் புதல்வியரைப் பரிமளப் தைலம் செய்கிறர்களாகவும், சமைப்பவர்களாகவும், அப்பம் சுடுபவர் களாகவும், வைத்துக்கொள்வான். அவன் உங்கள் வயல்களிலும், திராட்சைத் தோட்டங்களிலும், ஒலிவத் தோப்புகளிலும் சிறந்தவற்றை எடுத்துக்கொண்டு தன் அலுவலர்களுக்கு கொடுப்பான். உங்கள் தானியத்திலும் திராட்சைப் பலனிலும், பத்தில் ஒரு பங்கை எடுத்துக் கொண்டு தன் காரியத் தலைவருக்கும் அலுவலருக்கும் கொடுப்பான். உங்கள் வேலைகாரரையும் வேலைக்காரிகளையும், உங்கள் கால்நடை களில் சிறந்தவற்றையும் உங்கள் கழுதைகளையும் தன் சொந்த அலுவலுக்காகப் பயன்படுத்துவான். உங்கள் மந்தைகளில் பத்தில் ஒரு பங்கு எடுத்துக் கொள்வான். நீங்கள் அவனுக்கு பணியாளர்களாய் இருப்பீர்கள். அந்நாளில் நீங்களே உங்களுக்காகத் தேர்ந்து கொண்ட அரசனை முன்னிட்டு முறையிடுவீர்கள். அந்நாளில் ஆண்டவர் உங்களுக்கு செவி கொடுக்கமாட்டார். மக்களோ சாமுவேலின் குரலுக்கு செவி கொடுக்க மறுத்து, இல்லை ”எங்களுக்குக் கட்டாயமாய் ஓர் அரசன் வேண்டும். அனைத்து வேற்றின மக்கள் போலவே நாங்களும் இருப்போம். எங்கள் அரசன் எங்களுக்கு நீதி வழங்குவார். எங்கள் போர்களை முன்னிட்டு நடத்துவார்”. என்றனர். மக்கள் கூறியவை அனைத்தையும் சாமுவேல் கேட்டு, அவற்றை ஆண்டவர் காதில் போட்டு வைத்தார். ஆண்டவர் சாமுவேலிடம் கூறியது ”அவர் குரலுக்கு செவி கொடுத்து அவர்கள் மீது ஓர் அரசனை ஆளச் செய். பின்பு சாமுவேல் இஸ்ரயேல் மக்களைப் பார்த்து, ஒவ்வொருவரும் தம் நகருக்குச் செல்லட்டும்” என்றார்.

**பதில்பாடல் :** ஆண்டவரின் பேரன்பை நான் என்றும் பாடுவேன்

### நற்செய்தி : மாற்கு 2 : 1 - 12

அக்காலத்தில் இயேசு மீண்டும் கப்பர்நாகுமுக்குச் சென்றார். அவர் வீட்டில் இருக்கிறார் என்னும் செய்தி பரவிற்று. பலர் வந்து கூடவே, வீட்டு வாயிலருகிலும் இடமில்லாமல் போயிற்று. அவர் அவர்களுக்கு இறைவார்த்தையை எடுத்துரைத்துக் கொண்டி ருந்தார். அப்போது முடக்குவாதமுற்ற ஒருவரை நால்வர் சுமந்து அவரிடம் கொண்டுவந்தனர். மக்கள் திரண்டிருந்த காரணத்தால் அவரை இயேசுவுக்கு முன் கொண்டுவர இயலவில்லை. எனவே அவர் இருந்த இடத்திற்கு மேலே வீட்டின் கூரையை உடைத்துத் திறப்பு உண்டாக்கி, முடக்குவாதமுற்றவரைப் படுக்கையோடு கீழே இறக்கினர். இயேசு அவர்களுடைய நம்பிக்கையைக் கண்டு, முடக்குவாதமுற்றவரிடம், ”மகனே, உன் பாவங்கள் மன்னிக்கப்'பட்டன” என்றார். அங்கே அமர்ந்திருந்த மறைநூல் அறிஞர் சிலர், ”இவன் ஏன் இப்படிப் பேசுகிறான்? இவன் கடவுளைப் பழிக்கிறான். கடவுள் ஒருவரே அன்றிப் பாவங்களை மன்னிக்க யாரால் இயலும்?” என உள்ளத்தில் எண்ணிக் கொண்டிருந்தனர். உடனே அவர்கள் தமக்குள் இவ்வாறு எண்ணுவதை இயேசு தம்முள் உணர்ந்து, அவர்களை நோக்கி, ”உங்கள் உள்ளங்களில் இவ்வாறு எண்ணுவது ஏன்? முடக்குவாதமுற்ற இவனிடம் ”உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன” என்பதா? ”எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட, என்பதா? எது எளிது? மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மானிட மகனுக்கு அதிகாரம் உண்டு என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும்” என்றார். பின்பு அவர் முடக்குவாதமுற்றவரை நோக்கி, ”நான் உனக்குச் சொல்கிறேன், நீ எழுந்து உன்னுடைய படுக்கையை எடுத்துக்கொண்டு உனது வீட்டுக்குப் போ” என்றார். அவரும் எழுந்து உடனே தம்முடைய படுக்கையை எடுத்துக்கொண்டு எல்லாரும் காண வெளியே சென்றார். இதனால் அனைவரும் மலைத்துப்போய், ”இதைப்போல நாம் ஒருபோதும் கண்ட தில்லையே” என்று கூறிக் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தனர்.

**தியானம்:** இன்றைய நற்செய்தியில் இயேசு பாவத்தையும் நோயையும் கவனிப்பதைப்பார்க்கிறோம். முடக்குவாத முற்றவர் எங்கிருந்து வந்தான் என்பது தெரியாது. எவ்வளவு தூரத்தில் இருந்து சுமந்து வந்தார்கள் என்று தெரியாது. இயேசுவைப்பற்றி கேள்விப்பட்டு அவர்கள் கூரையைப் பிரித்து வீட்டுக்குள் கொண்டு வருகின்றார்கள். இயேசுவால் எல்லாம் கூடும் என்று நம்பியதால் அந்த நான்கு நண்பர்கள் முடக்குவாத முற்றவரை கொண்டு வருகின்றார்கள். உடல் களைப்பை பொருட்படுத்தவில்லை கூட்டத்தை கண்டு தர்மசங்கடம் அடையாமல் நண்பன் குணமடைய வேண்டும் அது இயேசுவால் முடியும் என்று நம்பினார்கள் . இயேசு அவர்கள் நம்பிக்கையைக் கண்டு அதிசயம் செய்தார். இன்றைக்கு இயேசு இருக்கும் இடத்திற்கு நண்பர்களை அழைத்து செல்லும் உறவினர்களை கரம் பிடிக்கும், அல்லது இயேசுவை அறிமுகம் செய்யும் “கூரையைப்பிரிப்பவர்களாக”- வும் “கட்டில்”- கள் சும ப்பவர்களாக வாழ அழைப்பு விடுக்கப்பட்டு இருக்கிறோம். இதை எம் வாழ்வில் கடைப்பிடிக்க இறையருள் வேண்டுவோம்.